**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

அ.வ.எண்.358/2021 பி.வா.சா.1 முத்துசாமி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 03.02.2026

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2,6,7,8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) 2 ம் பிரதிவாதி ஆறுமுகம் என் தம்பி என்றால் சரிதான். 6 ம் பிரதிவாதி செல்வாத்தாள் என் தம்பி ஆறுமுகத்தின் மனைவி என்றால் சரிதான். 7, 8 பிரதிவாதிகள் ஆறுமுகத்தின் பிள்ளைகள் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி தமிழரசி என் மனைவி என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகள் என் பிள்ளைகள் என்றால் சரிதான்.

2) வழக்கு சொத்துக்கள் என் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களில் வாதிக்கு உரிமை உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்கள் பொறுத்து நான் 4, 5 பிரதிவாதிகள் ஆகிய செல்வராஜ், சிவகுமார் ஆகியோருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தேன் என்றால் சரிதான். 3 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தேன். வழக்கு சொத்துக்களை 4, 5 பிரதிவாதிகள் தான் சுவாதீனத்தில் வைத்து அனுபவிக்கிறார்கள் என்றால் சரிதான்.

3) என் மனைவி 3 ம் பிரதிவாதி தமிழரசி "super quality fiber " என்ற கயிறு தொழிற்சாலையை நடத்தி வருகிறாரா என்றால் 1985 முதல் நடத்தி வருகிறார். 4 ம் பிரதிவாதி SMS export என்ற நிறுவனம் நடத்துகிறார் என்றால் சரிதான். 5 ம் பிரதிவாதி SMS poultry farms என்ற கோழி பண்ணை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நானும் 1980 ல் இருந்து பரணி பைபர் என்ற நிறுவனம் நடத்தி வருகிறேன். வாதி வழக்கு தள்ளுபடியாக வேண்டுமா என்றால் தள்ளுபடி ஆக வேண்டும்.

**<u>11 ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

**(2, 6, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்படுகிறது)**

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம் /-(மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி